# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

01 JUN 2015

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

## EDUS 3202 Special Education

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

01.(அ) சாதாரணமான வகுப்பறை ஒன்றின் கல்விச் செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் பல்வேறு பிரிவினர் பற்றி கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) உள இயக்க இடர்பாடு மற்றும் சமூக மனவெழுச்சி இடர்பாடுகளுள்ள மாணவர்களை பொருத்தமானவர்களாக மீட்டெடுப்பதில் இன்றைய பாடசாலைகளின் செயற்பாடுகள் எத்தகைய பங்களிப்பினைச் செய்கின்றன என்பதைப் பரிசீலனை செய்க.

(10 புள்ளிகள்)

02.(அ) இலங்கையின் கல்வி அமைப்பில் உட்படுத்துகைக் கல்விக்கென தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால் கிடைக்கக்கூடிய பயன்பாடுகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) உட்படுத்துகைக் கல்வி தொடர்பாக ஒரு ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய திறன்களைப் பட்டியற்படுத்துவதுடன் அவற்றைக் கையாண்டு எவ்வாறு மாணவர்களைக் கல்வியில் ஈடுபடுத்தலாம் என்பதனை விளக்குக.

(15 புள்ளிகள்)

03.(அ) மனிதன் தனது செயற்பாடுகளைப் பூரணமாகச் செய்து முடிப்பதற்குத் தடையாக அமையும் காரணிகள் என ரிம் லோமன் (Tim Loreman) கூறும் காரணிகளை இன்றைய கல்வி சார் சமூகப் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) மொழி, தொடர்பாடல் என்பவற்றில் இடர்படும் மாணவர்களின் நடத்தைப் பண்புகளைக் குறிப்பிடுவதுடன் அவர்களுக்கு வழங்கக் கூடிய பரிகாரக் கற்பித்தல் முறைகளையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) விசேட தேவையுடைய குழந்தைகள் பிறப்பதற்கான காரணிகளைப் பட்டியற்படுத்துவதுடன் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) தாழ்தேர்ச்சி மட்ட மாணவர்கள் உருவாகுவதற்கு வீடு, பாடசாலை, சமூகம் என்பன எவ்வாறு காரணமாய் அமைகின்றன என்பதனை விமர்சிக்குக.

(13 புள்ளிகள்)

05.(அ) இலங்கையில் விசேட தேவைக் கல்வியின் முக்கியத்துவங்களுள் “அனைவருக்கும் கல்வி” என்ற சிந்தனையானது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை சாதாரண பாடசாலைக் கல்வியுடன் இணைந்த விசேட கல்விச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) புலன்கள் ரீதியாகக் குறைபாடுடையவர்களை வகைப்படுத்தி அவர்களுக்கான கற்றல் கற்வித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் காணப்படும் பிரச்சினைகள் எவ்வாறு அவர்களின் கற்றலுக்குத் தடையாக அமைகின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) விசேட தேவைக் கல்வியும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையும்.

(ஆ) மனப்பாங்கு, திறன் சார்பான கற்றல் இடர்பாடுகள்

(இ) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் உட்படுத்துகைக் கல்வியும்.

(ஈ) மாற்றுத் திறனாளிகளுக்குக் கல்வி வழங்குவதில் விசேட கல்வி நிறுவனங்களின் பங்கு.

(உ) தற்சிந்தனை (Autism) குறைபாடுடையோருக்கான கல்விச் செயற்பாடுகள்

(5x5=25 புள்ளிகள்)

*****

3